L.A.O.P.No.437 /2022 தேதி -14.10.2024

C.W.3.–கேசவன்

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

இ.குமாரலிங்கபுரம் கிராமம் சர்வே எண்.164/1ல் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 25 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்து எஸ் எல் ஆர் ஆவணத்தின் படி ரெங்கசாமி நாயக்கர், வெங்கடசாமி நாயக்கர், சீனிநாயக்கர் பெயரில் தாக்கலாகி இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்தை மேற்படி 3 நபர்களுக்குள் எவ்வாறு பகிர்ந்து கொண்டார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எங்களிடம் இல்லை என்றால் சரிதான். மேற்படி 3 நபர்களில் ரெங்கசாமி நாயக்கருக்கு 2 மனைவிகள். அதில் முதல் மனைவி வெங்கிட்டம்மாளுக்கு வெங்கட்ராமானுஜம், நாச்சியாரம்மாள் என்ற 2 பிள்ளைகள் என்றால் சரிதான். லட்சுமியம்மாளுக்கு சீனியம்மாள், ரேணுகா என்ற பிள்ளைகள் என்றால் சரிதான். அதுபோல் வெங்கடசாமி நாயக்கருக்கு ஆண்டாளம்மாள், எத்திராஜம்மாள் என்ற இரண்டு பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பெண்களையும் திருமணம் செய்துகொண்டவர் மன்னார்சாமி ஆவார். மன்னார்சாமி தான் என் தந்தை. என் தந்தை மன்னார்சாமிக்கு ஆண்டாளம்மாள் மூலம் ரெங்கராஜ் என்ற ஒரேமகன். என் தாயார் மூலம் ராகவராமானுஜம், கேசவன் (நான்), புருஷோத்தமன், இளையாழ்வார், கோவிந்தராஜ், ஜெயராமன் மற்றும் கண்ணன் ஆகியோர் வாரிசுகள். இதில் புருஷோத்தமன் என்பவர் இறந்துவிட்டார். புருஷோத்தமனுக்கு மனைவி, 2 பெண் குழந்தைகள், 1ஆண் குழந்தையும் வாரிசுகளாக உள்ளார்கள். எஸ் எல் ஆர் ஆவணத்தில் உள்ள சீனிநாயக்கர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார். எஸ் எல் ஆர் ஆவணத்தில் கண்ட நபர்கள் சொத்தை எவ்வாறு பகிர்ந்து கொண்டார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். சர்வே எண்.164/1ல் எனது தாயார் மற்றும் பெரியம்மாளுக்கு எவ்வளவு விஸ்தீரணம் கிடைத்தது என்பதற்கு என்னிடம் எந்த விதமான ஆவணங்களும் இல்லை, எனக்கும் அதுபற்றி தெரியாது. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்போது வழங்கிய பட்டாவில் தான் சர்வே எண்.164/1பி–ல் கண்ட 0.63.0 ஹெக்டேர்ஸ்

நிலம் எனது சகோதரர் கண்ணன் பெயரிலும், சர்வே எண்.164/1சி–ல் கண்ட 0.29.5 ெஹக்டேர்ஸ் நிலம் கேசவராமானுஜம் பெயரிலும், சர்வே எண்.164/1டி–ல் கண்ட 0.26.0 ெஹக்டேர்ஸ் நிலம் ராகவராமானுஜம் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது வாய்மொழி பாகப்பிரிவினையின் படி வழங்கப்பட்டுள்ளது. ஆர்ஜித அதிகாரியின் விசாரணையின் போதும் சரி, தற்போது தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவிலும் எப்போது நான் குறிப்பிடுவது போல வாய்மொழி பாகம் நடந்தது என்பது பற்றி எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். ஆர்ஜித நடவடிக்கை விசாரணையின் போது ரெங்கராஜ் என்பவரின் பிள்ளைகள் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாக கூறி அவர்களுக்கு சரிபாதி பங்கு கோரி கட்சி செய்தார்கள் என்றால் சரிதான். வழக்கில் கண்ட ஆர்ஜிதநிலமும், எனது சகோதர்களின் பெயரில் உள்ள ஆர்ஜித நிலங்களும் எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதக்குரிய மூல ஆவணங்களை தாக்கல் செய்ததாலும், ரெங்கராஜின் பிள்ளைகளின் ஆட்சேபணை செய்ததாலும் தான் ஆர்ஜித நிலத்திற்குண்டான நஷ்டஈட்டுத் தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது தாங்கள் ஆர்ஜித நிலம் எங்களுக்கு மட்டும் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்குரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் என் சகோதரரின் கோரிக்கை நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினை சம்மந்தமாக வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

L.A.O.P.No.437/2022 தேதி –14.10.2024

C.W.2.–இளையாழ்வார்

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

இ.குமாரலிங்கபுரம் கிராமம் சர்வே எண்.164/1ல் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 25 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்து எஸ் எல் ஆர் ஆவணத்தின் படி ரெங்கசாமி நாயக்கர், வெங்கடசாமி நாயக்கர், சீனிநாயக்கர் பெயரில் தாக்கலாகி இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்தை மேற்படி 3 நபர்களுக்குள் எவ்வாறு பகிர்ந்து கொண்டார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எங்களிடம் இல்லை என்றால் சரிதான். மேற்படி 3 நபர்களில் ரெங்கசாமி நாயக்கருக்கு 2 மனைவிகள். அதில் முதல் மனைவி வெங்கிட்டம்மாளுக்கு வெங்கட்ராமானுஜம், நாச்சியாரம்மாள் என்ற 2 பிள்ளைகள் என்றால் சரிதான். லட்சுமியம்மாளுக்கு சீனியம்மாள், ரேணுகா என்ற பிள்ளைகள் என்றால் சரிதான். அதுபோல் வெங்கடசாமி நாயக்கருக்கு ஆண்டாளம்மாள், எத்திராஜம்மாள் என்ற இரண்டு பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பெண்களையும் திருமணம் செய்துகொண்டவர் மன்னார்சாமி ஆவார். மன்னார்சாமி தான் என் தந்தை. என்தந்தை மன்னார்சாமிக்கு ஆண்டாளம்மாள் மூலம் ரெங்கராஜ் என்ற ஒரேமகன். என் தாயார் மூலம் ராகவராமானுஜம், கேசவன், புருஷோத்தமன், இளையாழ்வார்(நான்), கோவிந்தராஜ், ஜெயராமன் மற்றும் கண்ணன் ஆகியோர் வாரிசுகள். இதில் புருஷோத்தமன் என்பவர் இறந்துவிட்டார். புருஷோத்தமனுக்கு மனைவி, 2 பெண் குழந்தைகள், 1ஆண் குழந்தையும் வாரிசுகளாக உள்ளார்கள். எஸ் எல் ஆர் ஆவணத்தில் உள்ள சீனிநாயக்கர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார். எஸ் எல் ஆர் ஆவணத்தில் கண்ட நபர்கள் சொத்தை எவ்வாறு பகிர்ந்து கொண்டார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். சர்வே எண்.164/1ல் எனது தாயார் மற்றும் பெரியம்மாளுக்கு எவ்வளவு விஸ்தீரணம் கிடைத்தது என்பதற்கு என்னிடம் எந்த விதமான ஆவணங்களும் இல்லை, எனக்கும் அதுபற்றி தெரியாது. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்போது வழங்கிய பட்டாவில் தான் சர்வே எண்.164/1பி–ல் கண்ட 0.63.0 ெஹக்டேர்ஸ் நிலம் எனது சகோதரர் கண்ணன்

பெயரிலும், சர்வே எண்.164/1சி–ல் கண்ட 0.29.5 ெஹக்டேர்ஸ் நிலம் கேசவராமானுஜம் பெயரிலும், சர்வே எண்.164/1டி–ல் கண்ட 0.26.0 ெஹக்டேர்ஸ் நிலம் ராகவராமானுஜம் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது வாய்மொழி பாகப்பிரிவினையின் படி வழங்கப்பட்டுள்ளது. ஆர்ஜித அதிகாரியின் விசாரணையின் போதும் சரி, தற்போது தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவிலும் எப்போது நான் குறிப்பிடுவது போல வாய்மொழி பாகம் நடந்தது என்பது பற்றி எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். ஆர்ஜித நடவடிக்கை விசாரணையின் போது ரெங்கராஜ் என்பவரின் பிள்ளைகள் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாக கூறி அவர்களுக்கு சரிபாதி பங்கு கோரி கட்சி செய்தார்கள் என்றால் சரிதான். வழக்கில் கண்ட ஆர்ஜிதநிலமும், எனது சகோதர்களின் பெயரில் உள்ள ஆர்ஜித நிலங்களும் எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதக்குரிய மூல ஆவணங்களை தாக்கல் செய்ததாலும், ரெங்கராஜின் பிள்ளைகளின் ஆட்சேபணை செய்ததாலும் தான் ஆர்ஜித நிலத்திற்குண்டான நஷ்டஈட்டுத் தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது தாங்கள் ஆர்ஜித நிலம் எங்களுக்கு மட்டும் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்குரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் என் சகோதரரின் கோரிக்கை நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினை சம்மந்தமாக வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>